தமிழ் இன்பம் > 1.1. தமிழ்மொழி வாழ்த்து

# I. சொல்லும் பொருளும்

1. நிரந்தரம் – காலம் முழுமையும்
2. வண்மொழி – வளமிக்கமொழி
3. வைப்பு – நிலப்பகுதி
4. இசை – புகழ்
5. சூழ்கலி – சூழ்ந்துள்ள அறியாமை இருள்
6. தொல்லை – பழமை

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

Question 1.

மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .........

அ) வைப்பு

ஆ) கடல்

இ) பரவை

ஈ) ஆழி

Answer:

அ) வைப்பு

Question 2.

‘என்றென்றும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………

அ) என் + றென்றும்

ஆ) என்று + என்றும்

இ) என்றும் + என்றும்

ஈ) என் + என்றும்

**Answer:**

**ஆ) என்று + என்றும்**

**Question 3.**‘வானமளந்தது’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………………

அ) வான + மளந்தது

ஆ) வான் + அளந்தது

இ) வானம் + அளந்தது

ஈ) வான் + மளந்தது

**Answer:**

இ) வானம் + அளந்தது

Question 4.

‘அறிந்தது + அனைத்தும்’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்Question 4.

‘அறிந்தது + அனைத்தும்’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …………………

அ) அறிந்தது அனைத்தும்

ஆ) அறிந்தனைத்தும்

இ) அறிந்ததனைத்தும்

ஈ) அறிந்துனைத்தும்

Answer:இ) அறிந்ததனைத்தும்

Question 5.

‘வானம் + அறிந்த’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …………………

அ) வானம் அறிந்து

ஆ) வான் அறிந்த

இ) வானமறிந்த

ஈ) வான்மறிந்த

Answer:

இ) வானமறிந்த

தமிழ்மொழி வாழ்த்து – இப்பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச்சொற்களை எடுத்தெழுதுக

.வாழ்க – வானமளந்த

வாழிய – வாழ்க

ஏங்கள் – என்றென்றும்

வண்மொழி – வளர்மொழி

## குறுவினா

Question 1.

தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?

Answer:

ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்டு வாழ்கிறது.

Question 2.

தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருள்களையும் அறிந்து மேன்மேலும் வளர்கிறது.

## சிறுவினா

**Question 1.**

தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

**Answer:**

எல்லா காலத்திலும் நிலைபெற்று தமிழே! வாழ்க.

எல்லாவற்றையும் அறிந்துரைக்கும் தமிழே! வாழ்க.ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலம் முழுவதும் புகழ்கொண்ட தமிழே! வாழ்க.

உலகம் உள்ளவரையிலும் தமிழே! வாழ்க.

எங்கும் உள்ள அறியாமை இருள் நீங்கட்டும்.

தமிழ் உயர்வுற்று உலகம் முழுதும் சிறப்படைக!

பொருந்தாத பழங்கருத்தால் உண்டாகும் துன்பங்கள் நீங்கி தமிழ்நாடு ஒளிரட்டும்.

என்றென்றும் தமிழே! வாழ்க!

வானம் வரையுள்ள எல்லாப் பொருட்களின் தன்மையை அறிந்து வளரும் தமிழே! வாழ்க.